www.tamilarangam.net

கறுப்பு
தேசத்தைக் காக்கும் கரும்படை

கறுப்பு 036
09 செப்டம்பர் 2010
தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com

# மாவீரர்களைத் தூற்றி அவர்களின் பெயரில் பணம் திரட்டும் கிழட்டு ஓநாய் சீவரத்தினம்! புதிய ஒலிப்பதிவு அம்பலம்!!



மாவீரர்களின் பெயரைப் பயன்படுத்தி தனது கஜானாவை நிரப்பி வரும் கிழட்டு ஓநாய் நாகேந்திரம் சீவரத்தினம், மாவீரர்களை கொச்சைப்படுத்தியும், தூற்றியும் தனது நண்பர் ஒருவருடன் உரையாடிய பொழுது பதிவுசெய்யப்பட்ட ஒலிப்பதிவு வடிவம் கறுப்பின் ஊடகப் புலனாய்வாளர்களால் எமது ஆசிரியர் பீடத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இலண்டன் ரூட்டிங்க் பகுதியில் முத்துமாரி அம்மன் ஆலயத்தையும், வெம்பிளி பகுதியில் நடராஜர் ஆலயத்தையும் இயக்கி வரும் இந்தக் கிழட்டு ஓநாய், கே.பி என்றழைக்கப்படும் தம்பியையா செல்வராஜா பத்மநாதனின் நெருங்கிய உறவினராவார். மயிலிட்டியை பூர்வீகமாகக் கொண்ட இந்த கிழட்டு ஓநாய், 1980களில் நைஜீரியா, பப்புவா நியூ கினியா போன்ற நாடுகளில் கணக்காளராகவும், கணித ஆசிரியராகவும் தொழில்புரிந்து வந்ததோடு, அப்பொழுது இவரது முதலாவது மனைவியும், பிள்ளைகளும் இந்தியாவில் தங்கியிருந்தனர்.

இதனால் அடிக்கடி தமிழகத்திற்கு சென்றுவந்த இவருக்கு, அப்பொழுது கே.பி ஊடாக சென்னையில் வைத்து தமிழீழ தேசியத் தலைவர் அவர்களை சந்திப்பதற்கு வாய்ப்புக் கிடைத்திருந்தது. இதன்பொழுது ஆபிரிக்க நாடுகளில் இயக்கத்திற்கான பரப்புரைகளில் ஈடுபடுமாறு இவரிடம் தமிழீழ தேசியத் தலைவர் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் அங்கு ஆக்கபூர்வமான பணிகள் எதிலும் ஈடுபடாது இயக்கத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தி வந்த இவர், 1987ஆம் ஆண்டு பிரித்தானியாவை வந்தடைந்து அகதித் தஞ்சம் கோரினார்.

இதன் பின்னர் சிறிது காலத்திற்கு இலண்டனில் உள்ள நகர சபை ஒன்றில் கணக்காளராகத் தொழில்புரிந்த இவர், தனது நண்பர்களின் உதவியுடன் தமிழர் மறுமலர்ச்சிச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி, இயக்கத்திற்கான பரப்புரை என்ற பெயரில் மக்களை ஏமாற்றி வந்தார். இவருக்குப் போட்டியாக நரிகேசி உருத்திரகுமாரனின் அடிதடி அமைச்சரான சேகர் என்பவர், சோல்ற் என்ற பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் பிரித்தானியக் கிளையை இயக்கி வந்தார். இவருக்கும் சேகருக்கும் இடையில் நிலவிய முறுகல் நிலை, இருவராலும் நடத்தப்பட்ட பத்திரிகைகளில் எதிரொலித்திருந்தது. தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மீது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியைக் கொண்டிருந்த இந்தக் கிழட்டு ஓநாய், இக்காலப்பகுதியில் தேசத்தின் குரலை கீழ்த்தரமாக விமர்சித்து, தன்னால் நடாத்தப்பட்ட பத்திரிகையில் ராணி என்ற பெண்ணின் உதவியுடன் கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார்.

இதேநேரத்தில் இவரது பத்திரிகையில் ஜெயதேவனின் சகோதரியான 25 வயதுடைய திருமணமான பெண் ஒருவரும் பணியாற்றி வந்தார். இந்த இளம் பெண்ணுக்கு 5 வயதில் சிவரூபன் என்ற ஆண்பிள்ளையொன்றும் இருந்தது. அப்பொழுது 52 வயதுடையவராக இருந்தக் கிழட்டு ஓநாய் சீவரத்தினம், தனது மூத்த மகளின் வயதுடைய அந்தப் பெண்ணைக் காதலித்து, குடும்பத்தைக் குழப்பி இரண்டாவது திருமணம் புரிந்து கொண்டார். இதனால் இவருடன் கதைப்பதை இவரது முதலாவது மனைவியும், ஏனைய பிள்ளைகளும் தவிர்த்துக் கொண்டனர்.

கிழட்டு ஓநாய் சீவரத்தினத்தின் இந்த இரு செயல்கள் தொடர்பாகக் கேள்வியுற்ற தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், 1989ஆம் ஆண்டின் இறுதியில் முதுபெரும் தளபதி கிட்டு அவர்களை இலண்டனுக்கு அனுப்பி வைத்த பொழுது, இது தொடர்பாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு பணித்திருந்தார்.

இதனையடுத்து கிழட்டு ஓநாய் சீவரத்தினத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணைகளை நிகழ்த்திய கேணல் கிட்டு, தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களை இழிவுபடுத்திக் கட்டுரை எழுதியமைக்காகவும், ஏற்கனவே மனைவியும் பிள்ளைகளும் இருக்க, மகளின் வயதில் இருந்த பெண்ணைத் திருமணம் செய்தமைக்காகவும் இவரை இயக்க செயற்பாடுகளில் இருந்து நிறுத்தி அடித்து விரட்டியதோடு, இவரால் இயக்கப்பட்டு வந்த தமிழர் மறுமலர்ச்சிச் சங்கத்தையும் கலைத்திருந்தார்.

இதற்கிடையே கோவில் திருவிழா ஒன்றில் தனது புதிய இளம் மனைவியுடன் இவர் நடந்து சென்ற பொழுது, இவரை இடைமறித்த இவரது புதிய மைத்துனர் ஜெயதேவன், பொதுமக்களின் முன்னிலையில் இவரை அடித்து உதைத்திருந்தார்.

இதன் பின்னர் 1995ஆம் ஆண்டு ரூட்டிங்க் பகுதியில் முத்துமாரி அம்மன் ஆலயத்தை நிறுவிய இந்தக் கிழட்டு ஓநாய், அந்த ஆலயம் ஊடாக வருடந்தோறும் கிடைத்து வந்த மூன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலட்சம் பவுண்கள் இலாபப் பணத்தைச் சுருட்டி தனது கஜானாவிற்குள் நிரப்பி வந்தார். 2002ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட பின்னர், இவர் வன்னிக்கு அழைக்கப்பட்டு, எச்சரிக்கப்பட்டு பின்னர் இவருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது.

இதன் பின்னர் மீண்டும் இயக்கத்தின் பெயரில் பல்வேறு குழப்பங்களை விளைவித்து வந்த இந்தக் கிழட்டு ஓநாய், 2004ஆம் ஆண்டு தனது முதல் மனைவியின் மூத்த மகன் நிமலனுடன் சமரசம்செய்து, ரூட்டிங்க் முத்துமாரி அம்மன் கோவிலை தனது மகனின் பெயருக்கும், தனது சகோதரனின் பெயருக்கும் மாற்றினார். மே 18இற்குப் பின்னர் கே.பியுடனான தனது உறவுகளைப் புதுப்பித்துக் கொண்ட கிழட்டு ஓநாய், தற்பொழுது நரிகேசி உருத்திரகுமாரனின் அடிதடி அமைச்சர் சேகரின் உதவியுடன் இந்திய உளவாளி வி(நாய்)யகத்துடன் இணைந்து இலண்டனில் பல்வேறு குழப்பங்களை விளைவித்து வருகின்றார். இலண்டனில் தேசியச் சொத்தை விற்று ஐந்து இலட்சம் பவுண்களை சேகர் திருடுவதற்கு இவரே உதவி புரிந்திருந்தார்.

இவரது நடவடிக்கைகள் தொடர்பாகக் கேள்வியுற்ற எமது ஊடகப் புலனாய்வாளர்கள், தொடர்ச்சியாக இவரது தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்ட பொழுது பல தகவல்கள் கிடைத்துள்ளன. இதில் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களையும், முதுபெரும் தளபதி கேணல் கிட்டு அவர்களையும் மிகவும் கீழ்த்தரமான முறையில் இந்தக் கிழட்டு ஓநாய் விமர்சிக்கின்றார். 1985ஆம் ஆண்டு தான் இந்தியாவிற்கு சென்ற பொழுது தேசத்தின் குரல் தங்கியிருந்த வீடு வெடிகுண்டுத் தாக்குதலுக்கு ஆளாகியதாகவும், அப்பொழுது அவரைச் சென்று பார்க்குமாறு அனைத்துலகத் தொடர்பகப் பொறுப்பாளர் கஸ்ரோ (மணிவண்ணன்) அவர்கள் கோரிய பொழுது, "பாலசிங்கம் செத்திருந்தால் நான் அவரைப் போய்ப் பார்த்திருப்பேன். சாகவில்லை என்பதால் நான் போய்ப் பார்க்கவில்லை" என்று தான் கூறியதாகத் தெரிவித்து தனது நண்பரிடம் கிழட்டு ஓநாய் சீவரத்தினம் எக்காளமிடுகின்றார்.

தமிழீழ தேசியத் தலைவரின் ஆலோசகராக தேசத்தின் குரல் பணிபுரிந்ததை தன்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்று குறிப்பிடும் இந்தக் கிழட்டு ஓநாய், இதனால் அவரைப் பற்றிக் கீழ்த்தரமாகப் பத்திரிகையில் தான் கட்டுரை எழுதியதாகவும் கூறுகின்றார். இதனால் கோபம் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை தன்னை இயக்கப் பணிகளில் இருந்து நீக்கியதாகவும், இனிமேல் இயக்க அலுவலகத்திற்கு வந்தால் இவரைத் துப்பாக்கியால் சுட நேரிடும் என்று கேணல் கிட்டு எச்சரித்ததாகவும் இந்தக் கிழட்டு ஓநாய் ஒப்புக்கொள்கின்றார். கேணல் கிட்டுவிற்கு தன்மீது பொறாமை என்று கூறும் இந்தக் கிழட்டு ஓநாய், மிகவும் கீழ்த்தரமான முறையில் முதுபெரும் தளபதியை விமர்சிக்கின்றார்.

தமிழீழ தேசத்தினதும், தேசியத் தலைவரினதும் பெரும் தூண்களாக செயற்பட்ட தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், முதுபெரும் தளபதி கேணல் கிட்டு ஆகிய இரு மாவீரர்களையும் மிகவும் கீழ்த்தரமான முறையில் விமர்சிக்கும் 73 வயதுடைய இந்தக் கிழட்டு ஓநாயின் ஒலிப்பதிவு வடிவத்தை இத்துடன் உலகத் தமிழ் உறவுகளின் கவனத்திற்காக இணைத்துள்ளோம்.

இந்தக் கிழட்டு ஓநாய் தொடர்பாக அனைவரையும் மிகவும் அவதானமாக இருக்குமாறு நாம் கேட்டுக் கொள்வதோடு, இவரது ஆலயங்களுக்கு எவ்வித நிதியுதவிகளையும் வழங்க வேண்டாம் என்று அன்புடன் வேண்டுகின்றோம்.

# லங்கா சிறீயுடன் கூட்டுச்சேரும் இராமு.சுபன்

பசில் ராஜபக்சவின் நெருங்கிய நண்பரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீவாத்தியின் சகோதரரின் ஊடகமான லங்காசிறீயுடன் காகிதப்புலிகளின் தலைவர் இராமு.சுபன் கூட்டுச் சேர்ந்திருப்பது தொடர்பான நம்பகமான தகவல்கள் கறுப்புக்குக் கிடைத்துள்ளன. சிங்கள அரசின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கி வரும் கே.பியை விமர்சிக்கும் தமிழ்த் தேசிய இணைய ஊடகங்கள் மீது, காகிதப்புலி இராமு.சுபனின் விசைப்பலகை வீரர்களால் அடிக்கடி இணையப் பயங்கரவாதத் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இதனால் இவ்வாறான தமிழ்த் தேசிய இணைய ஊடகங்கள் அடிக்கடி செயலிழக்கின்றன. தற்பொழுது லங்காசிறீ - தமிழ்வின் வலையமைப்புடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் காகிதப் புலி இராமு.சுபன், அதனூடாகப் பல்வேறு நாசகாரப்பரப்புரைகளை முன்னெடுத்து உலகத் தமிழ் உறவுகளைக் குழப்புவதற்கு தயாராகி வருவதாக எமது நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன. இதனிடையே, இந்திய உளவாளி வி(நாய்)யகத்திற்கும், இராமு.சுபனுக்கும் இடையில் சொத்துப் பிரச்சினை ஏற்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. இராமு.சுபனின் தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்டு வரும் எமது ஊடகப் புலனாய்வாளர்கள், இது தொடர்பான ஒலிப்பதிவுகளை விரைவில் எமது ஆசிரியர் பீடத்திற்கு கையளிப்பதற்கு உறுதியளித்துள்ளனர்.








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்